# மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், திருத்தணி

## அ.வ.எண்.28/2018

இந்நீதிமன்றத்து எழுத்தர் திருமதி B. கௌசல்யா அவர்களால் சத்திய பிரமாணம் செய்விக்கப்பட்டு வாதி தரப்பு 2 ம் சாட்சியின் வாக்குமூலம் 1873 ஆம் ஆண்டு 10 வது சட்டத்திற்கு உட்பட்டு இன்று 2025 ஆண்டு ஜனவரி மாதம் 22 ஆம் நாளில் பதிவு செய்யப்பட்டது.

| | | | |
|---|---|---|---|
| பெயர் | : யோகநாதன் | மதம் | : இந்து |
| த/பெ | : ராமசந்திரன் | ஜாதி | : -- |
| வயது | : 64 | கிராமம் | : சோளூர்பாளையம் |
| தொழில் | : ஓட்டுநர் ஓய்வு | வட்டம் | : பெங்களூர் |

**22.01.2025**

**வா.சா. 2 திரும்ப அழைக்கப்பட்டு பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை**

1. வாதி சங்கர், பிரதிவாதி துரைகண்ணு, முனுசாமி எனக்கு என்ன உறவு என்றால் பெரியப்பா மக்கள், சித்தப்பா மக்கள் ஆவார்கள். வாதி என்ன பரிகாரம் கேட்டு வழக்கு தாக்கல் செய்துள்ளார் என்றால் என் பங்கை பதிவு செய்து கொடுத்துள்ளேன். அந்த இடத்தை விட்டு கொடுக்காததால் வழக்கு தாக்கல் செய்துள்ளார். நான் எந்த இடத்தை எழுதி கொடுத்தேன் என்றால் புல எண்.105/11A ஆகும். வழக்கு சொத்தின் விஸ்தீரணம் தெரியுமா என்றால் 7 வருடம் ஆனதால் எனக்கு நினைவில்லை.

2. தற்போது அந்த வீட்டில் யார் குடியுள்ளார் என்றால் நான் அங்கு போகவில்லை. எனவே எனக்கு தெரியாது. நான் பெங்களூர் போய் விட்டேன். என் அப்பா ராமசந்திரனுக்கு, சந்திரகேஷ், சந்திரன் என்ற வேறு பெயர்கள் உண்டு என்றால் சரிதான். பிரதிவாதி துரைகண்ணுவும் என் அப்பா ராமசந்திரனும் உடன் பிறந்தவர்கள் என்றால் சரிதான். பிரதிவாதி துரைகண்ணு வழக்கு சொத்தின் ஒரு பகுதியில் வீடு கட்டி குடியிருந்தார் என்றால் இல்லை. என் அப்பாதான் குடியிருந்தார்.

3. என் அப்பா எப்போது பெங்களூர் சென்றார் என்றால் 60 வருடம் ஆகும். என் அப்பா நான் பிறப்பதற்கு முன்பே பெங்களூர் சென்று விட்டதால் வீடு பற்றிய விவரங்கள் எனக்கு தெரியாது என்றால் சரியல்ல. என் அப்பா தான் பெங்களூர் செல்வதால் தன் பங்கையும் வாங்கி கொள்ளுமாறு துரைகண்ணுவிடம் சொல்லியுள்ளார்

என்றால் பொய். அதன்படி மேற்படி சொத்தில் உள்ள கதவு எண்.296 வீட்டிற்கு 2003 முதல் துரைகண்ணு வரி செலுத்தி மின் இணைப்பு பெற்று 2017 வரை வரிகள் செலுத்தி அனுபவித்து வந்துள்ளார் என்றால் இல்லை.

4. 2012ல் என் அப்பா உயிருடன் இருந்த போது 2ம் பிரதிவாதி முனுசாமியிடம் 15 ஆயிரம் பெற்று கொண்டு பதிவு செய்யாத கிரைய ஆவணம் எழுதி கொடுத்துள்ளார் என்றால் பொய். 2012ல் ஆவணம் எழுதிய பின்பு என் அப்பா இறந்துவிட்டதால் பதிவு செய்த கிரைய ஆவணம் எழுத முடியவில்லை என்றால் பொய். நான் பொய்யாக சொல்கிறேன் என்றாலும் என் அப்பா கிரையம் கொடுத்த விவரம் எனக்கும் என் அம்மாவுக்கும் தெரியும் என்றாலும் சரியல்ல. நானும் என் அம்மாவும் ஊருக்கு வரும் போதெல்லாம் தாவா சொத்தில்தான் தங்கியிருப்பார் என்றால் என் அம்மா இந்த ஊருக்கு வந்ததேயில்லை. என் அப்பா மட்டும்தான் வந்துபோவார்.

5. என் அப்பா இறந்த பின்பு 2ம் பிரதிவாதி முனுசாமி என்னிடமும் என் தாயாரிடமும் கிரைய ஆவணம் எழுதி கொடுக்க கேட்ட போது நாங்கள் ஏமாற்றவா போகிறோம் என்று சொல்லி கடத்தி விட்டோம் என்றால் பொய். என் பிரமாண வாக்குமூலத்தில் என் அப்பா வரி செலுத்தியதாக சொல்லியுள்ளதில் அவ்வாறு வரி ரசீதுகள் தாக்கல் செய்யவில்லை என்றால் தாக்கல் செய்துள்ளார்கள். நான் தற்போது என்ன வேலை செய்கிறேன் என்றால் 5 வருடமாக வேலை எதுவும் செய்யவில்லை.அதற்கு முன்பு ஓட்டுநராக பணிபுரிந்தேன்.

6. 2012ல் என் அப்பாவிற்கு 15 ஆயிரம் தந்த பின்பு நாங்கள் மேலும் 2 லட்சம் கேட்டோம் என்றாலும் 2ம் பிரதிவாதி தற்போது அவரால் தர இயலாது என சொன்னார் என்றாலும் பொய். சிறிது காலம் கழித்து பணம் தருவதாக 2ம் பிரதிவாதி சொன்னதற்கு வேறு யாருக்காவது கிரையம் எழுதி கொடுத்துவிடுவோம் என நான் சொன்னேன் என்றால் பொய். அதன் பின்பு நான் வாதிகளை அணுகி நிலத்தை கிரையம் வாங்கிக்கொள்ளுமாறு சொன்னேன் என்றால் இல்லை. நான் யாரையும் கேட்கவில்லை. வாதியும் ஏற்கனவே பிரதிவாதிக்கு கிரையம் கொடுத்ததால் தன்னால் வாங்க முடியாது என்று சொன்னதற்கு அது பதிவு செய்யாத ஆவணம் என்பதால் அது செல்லாது என சொன்னேன் என்றால் அது பொய்.

7. அதன் பின்பு நான் 2 லட்சம் பெற்று கொண்டு 2ம் பிரதிவாதியை ஏமாற்ற

வேண்டி நான் கிரைய ஆவணம் எழுதி கொடுத்தேன் என்றால் கேள்வியே பொய். என் அப்பா ஏற்கனவே 2ம் பிரதிவாதிக்கு பதிவு செய்யாத கிரைய ஆவணம் எழுதி கொடுத்துள்ள நிலையில் அதன்பின்பு நான் எழுதிய கிரைய ஆவணம் செல்லாது என்றால் சரியல்ல. இன்றைய தேதி வரை பிரதிவாதிகள்தான் குடியிருந்து அனுபவித்து வருகிறார்கள் என்றால் பொய். வாதிகள் அனுபவித்து வருகிறார்கள் என்று நான் பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல. இன்றைய தேதி வரை பிரதிவாதிகள்தான் குடியிருந்து அனுபவித்து வருவதால்தான் சுவாதீனம் கேட்டு இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளார் என்றால் நான் ஆவணம் பதிவு செய்த பெங்களூர் சென்றுவிட்டேன். நான் கூடுதல் பணம் பெற்று கொண்டு ஆவணம் பதிவு செய்து கொடுத்துள்ளதால் வாதிகளுக்கு ஆதரவாக பொய் சாட்சி சொல்கிறேன் என்றால் இல்லை.

(மறு விசாரணை இல்லை)